12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
அவர்கள் அருளியது

# பதினெண் சித்தர்களின்

# திரு வாசகம்





**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**


## இந்து இலக்கியக் கழக வெளியீடு

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,117 கார்த்திகை மாதம்.**

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. பதினெண்சித்தர்களின் குருபாரம்பரியம் வழங்கிடும் திரு வாசகம்.

2. அகத்தியர் சன்மார்க்க சங்கத்தினருக்கு விடுத்த திருமுகம்.

3. குரு வாசகம் - அச்சிட்ட அறிவிக்கையின் நகல்.

4. சித்தர் நெறி சிறு விளக்கம்.

5. பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரிய வாசகம்.

---------------------------------

# பதினெண்சித்தர்களின் திரு வாசக முன்னுரை

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களால் ‘குருதேவர் அறிக்கை’ வாயிலாகவும், ஏராளமான விளக்க அறிக்கை வாயிலாகவும் அருளுலக இருட்டடிப்புக்கள் வெட்ட வெளிச்சமாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பெரியதொரு முயற்சியாகவே பதினெண்சித்தர்களின் திரு வாசகம் வெளிவருகின்றது.

தேவாரம் பாடிய நால்வரில் மறவேள்வி நடத்தி **சித்தர் நெறியான இந்துமதத்தை மீண்டும் இம்மண்ணில் நிலைநாட்டிய ‘திருஞானசம்பந்தர்’ வடஆரியரல்ல!** என்ற பேருண்மையையும்; **அத்வைதத்தை உருவாக்கிய ‘ஆதிசங்கரர்’ அவர்களும் வடஆரியரல்ல! தமிழரே!** என்ற பேருண்மையையும் தமிழர்கள் முதற்கண் உணர வேண்டும்.

ஞானசம்பந்தர் திருநாவுக்கரசரின் ஆசியோடு புறப்பட்டு; சைவ மதமாம் சித்தர் நெறியின் உண்மைகளை நிலைநாட்டிட மதுரை மாநகர் சென்று சமணர்களுடன் அனல்-புனல் வாதத்தில் வென்றார். தோற்ற சமணர்கள் தாங்களாகவே மனம் இறுகி கழுவில் ஏறி இறந்தனரே அன்றி! வடஆரியர்கள் கூறுவது போல் சம்பந்தரோ, பாண்டிய மன்னனோ சமணர்களைக் கழுவில் ஏற்றவில்லை. சமயக் குரவர்களான நால்வரிலே மணிவாசகர், சுந்தரர் மற்றும் நாவுக்கரசரை விட இந்துமதம் தழைத்தோங்க, உண்மையும் சத்தியும் உடைய இந்துமதப் பயன்கள் உலகறியச் செய்யக் கிடைத்திட்ட பெரிய அரிய வாய்ப்பை மதுரையிலே சம்பந்தர் பயன்படுத்திக் கொண்டார்.

பதினெண்சித்தர்கள் படைத்து வகுத்திட்ட மதங்களில் ஒன்ருக சமண மதம் இருந்த போதிலும்; தற்போது இந்துமத மடாதிபதிகள் எவ்வாறு செயலற்று; உண்மையான பூசை, தவம், வேள்வி, யாகங்களில் முறையான பயிற்சியற்று கற்பனையில்-மடமையில்... மூழ்கியிருக்கின்றனரோ அவ்வாறுதான் அருக மதத்தின் அருளாளர்கள் அப்போது சோம்பி, பயிற்சியற்று இருந்தனர். எனவேதான், திருஞானசம்பந்தரின் அருட்தன்மையை உணரக் கூட முடியாமல் வாதிட்டுத் தோற்றனர். இந்துமதமும் தழைக்கத் துவங்கியது.

ஆனுல், நால்வர் உட்பட அறுபத்து நான்கு நாயன்மார்களில் சொல்லடி நாயனுர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைத் தவிர வேறு எவரும் ஆரியரின் வருகையால் பதினெண்சித்தர்களின் இந்துமதத்திற்கு ஏற்படுத்தப் பட்ட நலிவை, இழிவை கண்டிக்கவோ, தடுத்து நிறுத்தவோ முயலவில்லை. தந்தை பெரியார் ஒருவர்தான் இம்மாபெரும் பணிக்கு தனியொரு மனிதனுக நின்று போராட்டத்தைத் துவக்கினுர். அம்மாபெரும் பணியினைத் தொடரும் வகையில் ஒன்ருகத்தான் உண்மையான ஞானசம்பந்தரின் அருளுலக வீர வரலாற்றை கவிதை வடிவில் இங்கே தருகின்ருேம். இக்கட்டுரையையே திரு வாசகத்தின் முன்னுரையாய் தருகின்ருேம்.

இப்பேருண்மையின் அடிப்படையில்தான் இந்துமதத்தின் மூலவர்களான 'தமிழர்கள்' உண்மையான மத விழிச்சியும், தன்மான எழுச்சியும், தன்னம்பிக்கைச் செழுச்சியும், இன ஒற்றுமையும், மொழிப் பற்றும் பெற்று எழுச்சி பெற்றிட முடியும்.

-------------------------

# பதினெண்சித்தர் திரு வாசகம்

**[காவிரியாற்றங்கரைக் கருவூரரின் குருபாரம்பரியம்]**

எண்ணியே ஆயகலை நிலைக்கே ஒருவர் குறையாக

கண்மணியாம் இந்துமதம் காக்கப் போரிட்டவர்

திண்ணிய அருட்சத்தி மீக்கூறப் பெற்ற

தண்டமிழ் பாவாணர் நாயன்மார்கள் புகழுரைப்போம்.

வேண்டிய வரம்தரு சுடலையாண்டி பத்தர்களே

மண்டிய மடமைவளர் புத்தர் அமணரோடு போரிட்டார்.

கொண்ட பத்திக் கடலில் ஆழ்ந்தவரே ஆழ்வார்கள்;

விண்டிவர் விவாதப் போர் நாடித் தேடாது பத்தியிலாழ்ந்தனர்.

விண்ணூர்ந்த புகழ் அறுபத்து மூவரில் சமயக்குரவரே

நுண்ணிய அருட்போரில் இருளகற்றி ஒளியேற்றினர்;

பண்ணுக்குரிய பாடல்களால் பரமசிவனை வென்றனர்.

சுந்தரர் உலகியலை வென்று அருளாட்சி செய்தார்;

திருநாவுக்கரசர் சூதுச் சமணரை வென்று அருளாட்சி செய்தார்;

திருஞானசம்பந்தர் வாதுச் சமணரை வென்று அருளாட்சி செய்தார்;

மாணிக்கவாசகர் விவாதப் புத்தரை வென்று அருளாட்சி செய்தார்;

தெய்வத் தமிழால் அருளாட்சி புரிந்த இச்சமயக்குரவரில்

பாலுணவுண்ட பாலகனுய்ப் பத்திப் பணிக்குப் புறப்பட்ட
வேலுடையண்ணல் குலத்து அந்தணன் சீர்காழி
சிவபாத இருதயச் சித்தன் மகன் ஞானசம்பந்தன்;
செந்தமிழ்ச் சந்திர குலத்து வேதியன் மறையோன்,
பைந்தமிழ் முறையோன் நெறியோன் குருக்கள் மகன்,
வெந்தழல் கூத்தன் மனேவி தந்த அமுதுண்டவன்,
பைந்தமிழுக்கு இசைப் பேரிலக்கியம் தந்த வள்ளல்,
மாரு இளேயோனுய் வேறுலகம் சென்ற திருஞானசம்பந்தன்
தமிழால் பதினெண்சித்தர் படைத்த இந்துமதம் காத்தே
தமிழ்க்குடி மிடிமை அடிமை மடமை போக்கினுன்.
வித்தகத் தமிழில் இசையோடு தத்துவத் தேவாரம்
சித்திரமாய்ப் படைத்த தமிழ்ச் சித்தன் திருஞானசம்பந்தன்
எத்திற மெல்லாம் கூறியும் நாவுக்கரசர் வாழ்த்தோடு
நேத்திறச் சித்திர மதுரை மங்கயர்க்கரசி அன்புக்கு
உத்திறவாதமிட்டு அமணர் அனல் புனல் வாதத்துக்கே
சூத்திறத் தமிழாய்த் திருஞானசம்பந்தன் புறப்பட்டான்.
அத்திறமாய் ஆலவாய் அண்ணல் அங்கயற்கண்ணி கண்டு
தோத்திற முடித்துச் சத்திரத்துத் தங்கச் சமணர்
உத்தியால் நெருப்புற்ற சத்திரத்து வெப்பமே

சாத்திரச் சம்பந்தன் ஆணையால் பாண்டியனுக்கு நோயாயிற்று;

ஆத்திரச் சமணரின் அரும்பாடு வெப்பகற்றவில்லை,

சூத்திரச் சமணரின் சமசுக்கிருதம் செத்தது புரிந்தது.

தோத்திரச் சம்பந்தனின் அமுதத் தமிழ் வென்று நின்றது.

பாராளும் வேந்தன் பாதியுடல் வெப்பால் பதைத்தது;

போரிட்ட சமணரை வெகுண்டே சம்பந்தன் அடிபணிந்து

நீரிட்டவுடனே எரிச்சல் தணிந்து நேருற்றான் பாண்டியன்.

மீறிட்ட சமணரோடு சம்பந்தனைப் போரிட வேண்டினான்.

யாரிட்ட சாபம் அந்த வெப்புநோய் என்பதற்கே விளக்கம்

கோரிட்ட குலச்சிறை மங்கையர்க்கரசி விடைபெறவே

தமிழால் இறையாற்றல் நிலைநாட்டி விளக்கிட

தமிழந்தணன் சமசுக்கிருதப் பிணநிலை மெய்ப்பித்தான்.

விரிசடைக் கடவுளின் நமச்சிவாய நற்றமிழ்

எரிதழலில் பனையேட்டில் பொறித்திடச் சாமங்கள்

விரைந்தோடியும் சாம்பலாகா நிலைகண்டே வெட்கினர்.

தேரைமொழிச் சமசுக்கிருத எண்ணாயிரச் சமணர்

தவறு ஐயம் போக்கவே தமிழ்முனி திருஞானசம்பந்தன்

தழலில் தளர்நடையிட்டுத் தண்டமிழ் ஏடெடுத்து

அனல்வாதம் வென்ற கன்னித் தமிழ்ப் பனையேட்டை

அமணர் காணவே கடவுளுணர்ந்த பாண்டியன்
தண்டமிழ் திருக்கரத்தில் வழங்கினுன் திருஞானசம்பந்தன்.
கண்டதை விண்டுணர முடியாக் கருத்தழிவில்
மாண்டிடத் துடித்த அமணர் புனல்வாதம் நாடினர்.
ஆடிப் பெருவெள்ளம் அமணர்க்கு நல்ல வெற்றியே
தேடித் தருமென அனைவரும் எண்ணியே கலங்கிட
சூடிய பிறையோன் குலத்து ஏந்தரீகம் தாந்தரீகம்
நேமநியம நிடதநிட்டை சுருதிஆரண ஆகமமீமாம்சை
பத்தினும் வல்லியாய்த் திருஞானசம்பந்தன்
சூரியகுலத்து ஓம ஓக யாக யக்ஞ வேள்வித் தவ
ஞான மாந்தரீக எட்டு வல்லிகளையும் போற்றியே
அண்டபேரண்டமாளும் கடவுட்தமிழை எழுதிய பனையேட்டை
படகோரும் கரையோரப் பரியோரும் காணவே
வையை மைய மண்டபத்துப் படிதவழ் நீரில் விட்டான்
பொய்யாத் தெய்வத் தமிழ் அந்தணன் மகன்
திருஞானசம்பந்தன் போற்றி வாசகம் வாக்கு முழக்கியே.
அருளுலக இருளகற்றும் திருவிழாவே நிகழ்ந்ததன்று.
நீருள் மூழ்கிய ஏடு கண்டு கொக்கரித்த சமணர்
வீரிட்டலற விரைந்தே வெளிப்போந்த தமிழேடு

நேரிட்டனைவரும் காண ஆற்று நீரை எதிர்த்தது
போரிடப் புறப்பட்ட அம்பெனத் தமிழ்முனியின் ஏடு
பரியோரும் படகோரும் தொடரத் திருவேடகம்
நெறியோடு சென்று நின்றது சம்பந்தன் வேண்டுதலால்.
நீரின் மேல் நடந்தான் அருளாட்சித் தமிழ்முனி
திருஞானசம்பந்தன் விரைந்தே! விரைந்தே! விரைந்தே!
ஒருகுடைக் கீழ் உலகாளும் இந்துமதம் உணர்த்தவே!
நெருப்பால் எரியாது நீரில் வெல்லப்படாததுமாக
அருளூறு அமுதத் தமிழின் இறைமாட்சி ஏடு
நீரினின்று திருஞானசம்பந்தன் கையோடிப் புகுந்ததே.
கரைசேரச் சம்பந்தன் கட்டித் தழுவ இலிங்கமொன்று
விரைவாகவே தரையுள்ளிருந்து வெளிப்பட்டு நின்றது.
தரையோடு தன்னுடல் கிடத்தித் தண்டமிழ் முனி
நிறைவான இறைவழிபாட்டைச் சித்தர் நெறிப்படி
கருவாக்கு கருவாசகம் குருவாக்கு குருவாசகம்
தருவாக்கு தருவாசகம் திருவாக்கு திருவாசகம்
அருள்வாக்கு அருள்வாசகம் மருள்வாக்கு மருள்வாசகம்
ஓதியும் வாசித்தும் ஒருசாமம் முறையே நிறைவு செய்தார்.
குறைமனச் சமணர்கள் அதற்குள் கழுவிலேறிக்

குருதிகொட்டி இறுதி செய்தார் சமசுக்கிருத இருளுக்கு.
குமரனும் இராமனும் கண்ணனும் குருதி கொட்டியே
புரிந்த மறவேள்வியோடு ஒக்குமே இதுவும்.
விரிந்த செய்தியோடு தத்துவம் திருஞானசம்பந்தன்
பாடலிலும் பிற அடியவர் ஏட்டிலும் காணலாம்
சரித்திற ஒப்புதல் வரலாறு குருபாரம்பரியமே கூறும்.

- முற்றும்

குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரியத்திலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள் - சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளையின் எழுத்துக் குவியல்களிலிருந்து எடுக்கப் பட்டது.

**“பண்ணூர்ந்த சம்பந்தன் பைந்தமிழ் ஏடு**
**பொன்னென அனலில் ஒளிவிட்டு நின்றே**
**விண்ணூர்ந்த இந்துமதமும் அருளமுதத் தமிழும்**
**தண்பொழிலாய்ச் செழித்து வளர்ந்தன வாழ்ந்தன.”**

**“நற்றமிழ் சம்பந்தன் தெய்வவாசக ஏடு**
**நாற்றிசையோர் காண நாகமென எழுந்து**
**ஆற்றில் நீந்தி வென்று ஏடகத்தே நின்றது**
**போற்றியே தமிழும் இந்துமதமும் செழித்தன.”**

**குறிப்பு**:- திருஞானசம்பந்தரைப் பற்றிய குரு வாசக வரிகள் இவை குருபாரம்பரியத்திலிருந்து எடுக்கப் பட்டவை.

**எழுதியவர்**:- சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை.

**இதனை வழங்குபவர்**:- ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: அச்சிட்ட குருதேவர் அறிக்கை 13, 14, 15 ஆகியவற்றிலிருந்து எடுக்கப் பட்டது.//**

# தேவாரப் பாடல்கள் எத்தனை?

மூவராலும் பாடப்பட்ட மொத்தத் தேவாரங்கள் (49,000 + 16,000 + 38,000 = 1,03,000) ஓர் இலக்கத்து மூவாயிரம் என்றும்; அவற்றுள் அழியாமல் கிடைத்த தேவாரங்கள் (312+384+100 = 796) எழுநூற்றுத் தொண்ணூற்றாறு என்றும் **திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள்** அவர்களால் தெளிவாகக் குறிக்கப்படுகின்றது.

**திருநாவுக்கரசர்**: *'கூற்றாயின'* எனத் தொடங்கும் தேவாரம் முதல் *'ஒரு மானைத் தரிக்கும்'* எனத் தொடங்கும் தேவாரம் ஈறாக நாற்பத்தொன்பதாயிரம் (49,000) தேவாரப் பாடல்கள் பாடினார் என்றும்; ஆனால் தமக்கு முன்னூற்றுப் பன்னிரண்டு (312) தேவாரங்களே கிடைத்தன என்று குறிக்கின்றார்.

**திருஞான சம்பந்தர்**: *'தோடுடைய செவியன்'* எனத் தொடங்கும் தேவாரம் முதல் *'கல்லூர்'* எனத் தொடங்கும் தேவாரம் ஈறாகப் பதினாறாயிரம் (16,000) தேவாரப் பாடல்கள் பாடினார் என்றும்; ஆனால், தமக்கு முன்னூற்று எண்பத்து நான்கு (384) தேவாரங்களே கிடைத்தன என்றும் குறிக்கின்றார்.

**சுந்தரமூர்த்தி**: *'பித்தா'* எனத் தொடங்கும் தேவாரம் முதல் *'ஊழிதோறும்'* எனத் தொடங்கும் தேவாரம் ஈறாக முப்பத்தெண்ணாயிரம் (38,000) தேவாரப் பாடல்கள் பாடினார் என்றும்; ஆனால், தமக்கு நூறு (100) தேவாரங்களே கிடைத்தன என்றும் குறிக்கின்றார்.

# அகத்தியர் சன்மார்க்க சங்கத்தினருக்கு விடுத்த திருமுகம்

குருவாணை ஓலைநாயகம் அங்காள பரமேசுவரி சன்னிதானம் அகத்தியர் சன்மார்க்கத்தினருக்கு விடுக்கும் திருமுகம்:

பேரன்புடைய அகத்தியர் திருச்சபையினர் அனைவருக்கும் குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் தனது வணக்கத்தையும் நல்வாழ்த்தையும் உரைக்கின்றார்.

ஒரு நாட்டின் மரபு, பெருமை, செல்வம், வனப்பு, வளம், நலம், ... எனும் இன்னபிற ஊக்கமிக்கதொரு ஆக்கமிக்க நிலையினை அந்த நாட்டின் செல்வத்தை மட்டும் வைத்து கணக்கிடப் படுவதேயல்ல என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே!

இன்றளவும் இங்கிலாந்து, பிரான்சு, உருசியா, சீனா ... மக்களால் மதித்தும், போற்றப்பட்டும் வருகிறதென்றால்; அந்த நாட்டு அழியாத கருவூலங்களாகத் திகழும் இலக்கியத் தொகுப்புக்களே அதற்குக் காரணம் ஆகும். அதே நேரத்து நாகரீகங்களால், வரலாற்றுக் கலைச் சின்னங்களால் அழியாப் புகழையும், பெருமையையும் அடைகின்ற நாடுகள் பல உண்டு. இவையிரண்டும் ஒருங்கேயும், முறையோடும், முழுமையோடும் பெற்றுள்ள ஒரு நாடு உள்ளதென்றால் அது நமது தாய்த் திருநாடு ஆகும்.

பழம்பெருமைகளைப் பேசி வீண்பொழுது கழிக்க நாம் முன்வரவில்லை என்றாலும், நமது பழம்பெரும் உண்மைகளை ஏற்றுப்

போற்றி கைக்கொள்ளாமல்; மறந்தும், மறைத்தும், துறந்தும், துரத்தியும் வருவது கண்டுதான் நாம் அவற்றை உரைத்து சமுதாயத்திற்கு படம்பிடித்துக் காட்ட நினைக்கின்றோம்.

எண்ணற்ற நூல்கள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் தோன்றிக் கொண்டேயிருப்பினும்; நாளும் பொழுதும் மறைவது போல் மறப்பது போல் அவற்றையெல்லாம் மறந்து வருகின்றோம்.

ஆனால், நினைவோடும் கனவோடும் நீங்காமல் நிலையாக நமது பேச்சிலும், உணர்விலும் கரைந்து, கலந்து, மிதந்து வருவது நமது இலக்கியங்களாம் தென்னிந்திய சிறுநூல்கள்தான். சங்க இலக்கிய திருக்குறள், கம்பராமாயணம், பெரியபுராணம், திருவாசகம், தேவாரம் ... எனக் குறிப்பிடும் சிறிய அளவுதான்.

இவைகள் கூட மனிதன் வாழ்வை முழுமைப் படுத்துவதாகவோ, வாழ்வின் தெளிவான நடைமுறைகளை நடைமுறைப் படுத்துவதாகவோ அமையக் காணோம். இன்றைய நாகரீக வளர்ச்சி விஞ்ஞானம் வளர்க்கும் புறப்பொருள்களை ஆராய்வதிலும்; அதனை மனிதனுக்கு, மனிதனின் உடலுக்கு சுகம் தேட வைப்பதிலும்தான் பயன்படுகின்றனவே தவிர; ஏக்கங்களாலும், ஏமாற்றங்களாலும், ஏளனத்தாலும், அறியாமையாலும் ... இன்னபிற சமுதாயக் கொடுமையாலும் மனிதன் துன்புறும்போது இன்றைய மனிதன் கண்டுபிடித்த எதுவுமே அவனுக்குத் துணை வருவதில்லை; வர முடிவதில்லை. இதில் எவருக்கும் ஐயமில்லை. எண்ணிலடங்காமல் பொங்கி வரும் அவனின் அவல, அழுகை, கோப உணர்ச்சிகளைத் தணிக்கவோ, தணித்து மேலும் அவனது வாழ்வில் நம்பிக்கையோடு நடைபோட வைக்கவோ இவற்றில் எதுவுமே அவனுக்கு உதவுவதில்லை.

ஆனால், இன்றைய சமுதாயம் தேடுகின்ற வாழ்க்கை, நாடுகின்ற வாழ்வியலமைப்பை, பாடுகின்ற கவலைப்பாடலை, ஆடுகின்ற கண்கவர்

நடனத்தை, அனைத்தையும் ஒட்டுமொத்தமாகக் கலையால், சமயத்தால், அறிவியலால், இல்லறம் எனும் அறத்தால், இனிமை என்னும் இசையால், பண்ணால், ... உலகை முறையோடும், நெறியோடும், நேர்மையோடும், இனிமையோடும் பயின்றிட வழிகாட்டுவது, உதவுவது, ... சித்தர்நெறி ஒன்றேயாகும்.

மனித குலமே ஒன்று திரண்டு வந்து ஒருங்கே கூடி கேள்விக் கணைகளைத் தொடுத்தாலும் கூட அவையத்தனைக்கும் விடைகூறி, அதன் பொருள் கூறி, அதனின் பயன்கூறி, நடாத்தி அழைத்துச் செல்லும் ஒன்று உண்டென்றால் அதுதான் **சித்தர்நெறி** ஆகும்.

இதனை எங்ஙனம் உண்மையோடும், உறுதியோடும், தெளிவோடும் உணர முடியுமென்றால்; காற்றில் பறந்து விரிந்து செல்லக்கூடிய மென்மைத் தன்மை வாய்ந்த விதை போட்டு முளைத்து கிளைத்த ஆலமரம்தான் காற்றோடும், மழையோடும், வெயிலோடும் ஈடுகொடுத்து நின்றிடும் என்பதுபோல; ஆதியையும், அதன் வளர்ச்சியையும், அநுபவத்தின் வாயிலாக நேரில் மக்களை அறிகின்றதின் வாயிலாக பலநூறு அண்டங்களில், பல நூறு கோடியாண்டுகளில் சந்தித்ததின் வாயிலாக, இம்மண்ணுலகில் நேரடியாகக் கண்டதின் வாயிலாகத்தான் படைக்க முடிந்தது என்கின்ற போது உலகில் எந்த மொழியும், எந்த மதமும், எந்தத் தலைவனும் உணர முடியாத, மனித சமுதாயத்தை திருப்தி செய்ய முடியாத ஒரு பொறுப்பை, நிலையை, தன்மையை நிறைவு செய்ய முடியும், முடிகின்றது என்றால் அதற்குக் காரணம் விதை போட்டு வேரூன்றி முளைத்துக் கிளைத்திட்ட பாரம்பரிய மிக்க, வரலாறு மிக்க, உண்மையான நேரிய திறத்தினால்தான் ஆகும்.

காற்று உள்ள அளவும், கடல்நீர் உள்ள அளவும் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு இவற்றின் தரம், திறம், அறம், மறம்

ஆகியவை உணர்த்தும் அனைத்தும் நிலையாக இருந்து வருகின்றது என்றால் முறையான வளர்ச்சியை நெறியான நீரை ஊற்றி வளர்த்ததனாலேயாகும்.

இத்தகு திறன்மிக்க தத்துவம் இன்று மேடிட்டு மூடப்பட்டிட்ட கோபுரமாய், தாளிட்ட கருவூல அறையாய் கிடக்கின்றதென்றால் காரணம் என்ன? கடந்த கால வரலாறுகள் இத்தத்துவத்தை மறைத்தபோதிலும் கூட **'ஈடு இணையற்ற தத்துவங்களை ஏட்டிலே எழுதித் தொகுத்துப் பாதுகாத்து வைத்து நாளைய சமுதாயத்திற்கு வைத்துவிட்டுச் சென்ற பெருமை' தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூருருக்கே உரித்தானது**.

இன்றைய தஞ்சைக் கோயிலில் சன்னதி கொண்டுள்ள கருவூரார் (கி.பி.785 முதல் கி.பி. 1040 வரை) அன்று எழுதி வைத்துவிட்டுச் சென்ற நூல்களினால் செழுச்சியுற்றிட்ட அன்றைய சமுதாயம் மீண்டும் விழிச்சி பெற்றிட, எழுச்சி பெற்றிட அதே நூல்கள்தான் தூண்டுகோலாக அமைகின்றன. ஆனால் அத் தூண்டுகோல் காற்றில் அணைகின்ற சிறு அகல்விளக்காய் மாறிடாமல் பாதுகாக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு உங்களைப் போன்ற நல்ல சமுதாயப் பணி புரிகின்றவர்களிடத்தேதான் உள்ளது.

இன்றைய வேகமுடைய மக்கள் எந்த அளவிற்குப் போற்றுவார்களோ! தூற்றுவார்களோ! என்று சோதிடம் பாராமல் விதைவிதைப்போம்! நீரை ஊற்றுவோம்! பலன் தாராமலா போய்விடப் போகின்றது? என்ற நம்பிக்கையுடன் சமய இலக்கிய மறுமலர்ச்சியை, சிந்தனைப் போக்கை, அறிவுத் தாகத்தை இன்றைய மக்களிடையே உண்டாக்க முடியுமென்றால் அது புதிய பாணியில், புதிய கருத்தில் முழக்கி வருகின்ற **வண்டனைய நூல்களால்தான்** முடியும்.

மதம், கலை, அறிவியல், ... எனும் மனித அறிவிற்கு உட்பட்ட, தேவையான, தேடுகின்ற அனைத்து கருத்துக்களைக் கொண்ட நூல்களையே சித்தர்கள் அனைவரும் எழுதி வந்திருக்கின்றனர். இன்றைய குருமகாசன்னிதானமும் அதே வழியில்தான் செயல்பட்டு வருகின்றார். எண்ணற்ற பழம்பெரும் நூல்களையும், தான் எழுதிக் குவித்து வரும் எண்ணற்ற நூல்களையும் தன் கண்ணென பேணிப் பாதுகாத்து வருபவரே இன்றைய குருமகாசன்னிதானம்.

அவரது பொறுப்பு மிக்க பொறுமை வெறுமையாகிடக் கூடாது என்ற பொறுப்புணர்ச்சியால்தான் என் போன்ற எண்ணற்ற இளைஞர்கள்தான் இரவு பகலாக ஏடு நைந்தும், எழுத்து மங்கியும் சிதிலமுற்று வருகின்ற நூல்களை யெல்லாம் நகலெடுத்து வருகின்றோம். எங்களுடைய கண்கள் உறக்கத்தைத் தேடவில்லை; எங்களுடைய கைகள் ஓய்வைத் தேடவில்லை; உணர்வு சலிப்படையவில்லை. இருந்த போதிலும் தமிழ்மொழி காக்க, தமிழர் சமயம் காக்க, தமிழின நலம் காக்க எண்ணற்ற அமைப்புக்களும், தலைவர்களும் பெருகிக் கொண்டே வருகின்ற இத் திருநாட்டில் உண்மையாக உருப்படியாக தமிழ்மொழி காக்க, தமிழர் சமயம் காக்க, தமிழின நலம் காக்க எங்களைப் போன்றோர் நகலெடுத்துக் காக்கப்பட்டு வரும் நூல்கள் அச்சேறி அங்காடிக்கு வருவதுதான் உரிய வழி.

முதலில் தமிழர்கள் தங்களுடைய மொழி, இன, சமய, சமுதாய, இலக்கிய, கலை, அறிவியல், வரலாற்றுப் பெருமைகளையும், பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், நாகரீகக் கூறுகளையும், மரபுவழிப் பெருமைகளையும், ஒழுகலாற்று வழி உரிமைகளையும் தெரிந்து, அறிந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, ஒப்புக் கொண்டு செயலாக்கிடல் வேண்டும். அதன்பிறகுதான், இவற்றையெல்லாம் அண்டை மாநிலங்களும், அயல் நாடுகளும் உணரச் செய்யப்படும் பணி துவக்கப்படல் வேண்டும். அதாவது, தமிழ்மொழியில்

வெளியிடப்பட வேண்டிய நூல்கள் அனைத்தும் பெரும்பாலான உலகமொழியில் மொழிபெயர்க்கப்பட்டே தீர வேண்டும்.

இம் மாபெரும் பயன்மிக்க, நன்மைமிக்க, செயல்திட்டத்திற்கு உதவும்படி அரசுகளையும், அரசு சார்ந்த இயக்கங்களையும், சமுதாயத் தலைவர்களையும், சமயத் தலைவர்களையும், தனிப்பெரும் தலைவர்களையும், செல்வர்களையும் உதவுமாறு கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டோம். எங்குமே உண்மையான தமிழார்வத்தையோ, தமிழினப் பற்றையோ காண முடியவில்லை. எங்கும் போலிகளும், கூலிகளும் மலர்ந்துள்ள காரணத்தினால் தங்களைப் போன்று அவ்வப்போது எதிர்பாராது அறிமுகமாகின்றவர்களிடம் மட்டுமே இன்றைய குருமகா சன்னிதானம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்ட நிறைவுடையார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் நெடிய, பெரிய இடையீடற்ற தன்னம்பிக்கை மிக்க துணிந்த நற்பயன் நல்கக் கூடிய பணிகளைப் பற்றி கூறி வருகின்றோம்.

என்னைப் போன்ற இளைஞர்கள் எங்களுடைய பொருளாதார வசதி வாய்ப்புக்களுக்கேற்ப நல்ல தாள்களும், நல்ல ஊற்றுக்களும் (Ink, மை) விலைக்கு வாங்கி முடிந்தவரை, குருதேவர் அவர்கள் கூறி வருகின்றவைகளையும், வித்திட்டு வருகின்றவைகளையும் விரைந்து நகலெடுத்து உலகெங்கும் விரிந்து பரவிடச் செய்து வருகின்றோம். எங்களுடைய உணர்வுகள், குருதேவருடன் ஒன்றிவிட்டன என்பதற்குச் சான்றாக அவருடைய கருத்தோட்டங்களைப் போலவே, அவருடைய மொழிநலம் போலவே பெற்று வருகின்றோம் என்னைப் போன்ற எண்ணற்ற இளைஞர்கள். எங்களுடைய தன்னம்பிக்கையும், தளராத முயற்சியும் வளராத தத்துவங்களையும் வளர்க்கும்; மலராத திட்டங்களையும் மலர வைக்கும். இதில் எங்கள் எவருக்கும் எள்முனையளவு கூட ஐயமில்லை.

குருதேவர் அவர்கள் ஒரு மாபெரும் தத்துவத்தின் உரிமைக்குரிய பெருமைமிக்க வாரிசாவார். இவர் அளந்தறிய முடியாத தொன்மை படைத்த தத்துவத்தை உலகத்தார் அத்தனை பேரும் துய்த்து மகிழ்ந்து உய்வு பெற வேண்டும் என்ற பெருநோக்கில் தனது தனிப்பட்ட வாழ்வை உலக வரலாறாக வளர்த்து வருகின்றார். இவருடைய வெற்றி தோல்வி தனியொரு மனிதனின் வெற்றி தோல்வியாக அமைந்திடாது. அது இந்த மண்ணுலகின் முதல் மனித இனமான தமிழினத்தின் மாபெரும் எழுச்சி வரலாறாக, தாழ்ச்சி வரலாறாக ... உருவாகவே நேரிடும்.

சித்தர்கள் மடமைவாதிகள் (Superstitious men) அல்லர்; பழமைவாதிகள் (Conservatives) அல்லர்; மதவெறியர்கள் (Religious Fanatics) அல்லர்; காட்டுமிராண்டித் தனமான கற்பனைவாதிகள் (Men of Wild Dreams) அல்லர்; பகற்கனவு காண்பவர்கள் (Men of Daylight dreams) அல்லர்; ... என்பதை முதலில் தமிழர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். பிறகு இந்தியத் துணைக்கண்டத்து பெருமக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பகுத்தறிவு (Rationalism), சீர்திருத்தம் (Reformation) என்ற பெயர்களால் நாத்திகவாதம் (Atheism) முட்புதர் போல முளைத்து கிளைத்து கிடப்பதை வேரோடு பறித்து அழித்து ஒழிக்க முடியும்.

ஏனெனில், சித்தர்களை விட சிறந்த பகுத்தறிவு வாதிகள் (Rationalists), முற்போக்கு வாதிகள் (Radicalists), சீர்திருத்தவாதிகள் (Reformers), புரட்சிவாதிகள் (Revolutionists), விஞ்ஞானிகள் (Scientists), சிந்தனையாளர்கள் (Thinkers), மேதைகள் (Scholars), ... இவ்வுலகின் எந்தப் பகுதியிலும், எந்த இனத்திலும் இதுகாறும் தோன்றவேயில்லை. அவர்களே அறிவியல் அடிப்படையில் தனிமனிதன் வாழ்வின் செம்மைக்கும், சமுதாய வாழ்வின் கட்டுக்கோப்புக்கும், மானுட இனத்தின் கூட்டுடமைக்கும், பொதுவுடமைக்கும்,

சமத்துவத்திற்கும், சகோதரத் தத்துவத்திற்கும் நிலையான வழிவகைகளைக் கண்டு அவற்றை முழுமையாகச் செயல்படுத்திச் சென்றிட்டார்கள்.

ஆனால், நாற்றங்காலிலேயே பயிருக்கு நோய் வந்துவிட்டது போல் தமிழர்களுக்கிடையிலேயே சித்தர்நெறித் தத்துவங்கள் செல்வாக்கையும், செயலையும் இழக்க நேரிட்டுவிட்டது. எனவேதான், நாற்றங்கால் பயிருக்கு நோய் நீக்கத்திற்கும், நோய்த் தடுப்பிற்கும், வளத்திற்கும், செழிப்பிற்கும் உரிய முயற்சிகளை உரிய அளவில் பொறுமையோடு, அமைதியாக செயலாக்கி வருகின்றார் எங்களது குருதேவர்.

மந்திற மாயங்களால் மட்டும் ஆனதல்ல சித்தர்நெறி; மருத்துவங்களாலும், இரசவாதங்களாலும் மட்டும் வலிமைப் படுத்தப்பட்டதல்ல சித்தர்நெறி. அதில் அடங்காதது எதுவுமே இல்லை என சுருக்கமாகக் கூறி அஞ்சல் முடிக்கின்றேன்.

- இதன் நகலை அல்லது அஞ்சலை தங்களைச் சந்திக்கும் அனைவருக்கும் அனுப்பும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

**அன்பு**

**சி.கவிக்குமார்.**

**குருவாணை ஓலைநாயகம்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியான் திரு சி.கவிக்குமார் அவர்களின் கையெழுத்தில் இருந்த பிறதியின் நகல். 1979இல் எழுதப் பட்டிருக்கலாம் என்று கருதப் படுகின்றது.//**

ஓம்

தாத்தா சித்தர் கருவூரூரே போற்றி!

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

# குரு வாசகம்

1. பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் இம்மண்ணுலகுக்கு வரும்போதே பேசிட்ட மொழிதான் தமிழ்மொழி. இம்மொழியில் ஒவ்வொரு ஒலியும் அண்டப் பெருவெளியில் கோடிக் கணக்கில் இயங்கும் நாள்களும், கோள்களும், மீன்களும் எழுப்பும் ஒலிகளின் அடிப்படையான உயிர்ப்பொலியாகும்.

2. தமிழ்மொழியைத் திருத்தமாகப் பேசுவதே இறைமையிடத்து வழிபாடு செய்வதாகும்.

3. அன்றுட வாழ்வியல் நிகழ்ச்சிகளிலும் கூட அளவுக்கதிகமாக ஆரியக் கற்பனைகளும், கருத்துக்களும் ஆட்சி செய்வதால்; பாடி மகிழத் திருவாசகம் இருப்பது போல்; படித்துப் பயன்படுத்தி மகிழ்ந்திடக் குருவாசகம் பிறப்பிக்கப் படுகின்றது.

4. எல்லாக் கற்களும் நவரத்தினங்களைப் போல் ஒளிர்வதில்லை. அதுபோல், எல்லா மனிதர்களும் இறைமைப் பேறு பெற்றுத் திருவருட் செல்வர்களாவதில்லை.

5. இரவும் பகலும் பிறவிக் குருடர்க்கு ஒன்றேயாமாதல் போன்று; பிறப்பில் மரத்துப் போன மனமுடையோர்க்கு இறைமை இருப்பதும், இல்லாததும் ஒன்றே.

6. ‘சொர்க்கம்’, ‘நரகம்’ என்பவை சமயத்தை வலிமையாக்கப் பயன்பட்ட அளவுக்குச் சமயத்தை நலிவடையச் செய்யவும் பயன்பட்டுள்ளன.

7. ஏழையும், செல்வனும் இறைமையின் விருப்பத்தால் உருவாக்கப் பட்டவர்களல்ல. உலகியலும், வாழ்வியலும் இரு கையாகப் பெற்றவர்கள் உருவாக்கிக் கொள்ளும் நிலையே ஏழ்மை, செல்வம்.

8. நோய்களும், பேய்களும் துன்புறுத்துவது இறைமையின் ஆணையால் அல்ல. தூய்மையும், வாய்மையும் பொய்க்கும்படி வாழ்பவர்களின் வாரிசுகளே நோய்களுக்கும், பேய்களுக்கும் விளையாட்டுப் பொருள்களாகின்றனர்.

9. மனிதன் பிறரை துன்புறுத்தாமல், வஞ்சிக்காமல், ஏமாற்றாமல், அடிமைப் படுத்தாமல் வாழ்வதே இறைமைத் தன்மை பெறுதற்குரிய சிறந்த வழிகள்.

10. அன்றாடம் மலரும் மலர் போன்று திங்கள் தோறும் மலரும் மலரே பெண். இயற்கையின் எழில்மிகு, இன்பமிகு, பயன்மிகு படைப்பே பெண். இப்பெண்ணை விதவையென்று ஒதுக்கி வீணாக்குவதை விடக் கொடிய மடமையில்லை.

11. மானுட வாழ்வின் கண்ணே பெண்ணாவாள். இதை உணராது வாழும் ஆணின் வாழ்வு ஆறாப் புண் பெற்ற நோயாளியின் துன்ப வாழ்வாகிடும்.

12. இல்லற வாழ்வே இயற்கையோடு இயைந்த ஒன்று. அதுவே இறைமையைத் தங்களுக்குள் நிறைத்துக் கொள்ள வழி செய்யும் உயரிய வாழ்வு.

13. துறவறம் பேய் நிலைக்கும், நோய் நிலைக்கும் வழி செய்யும் இழிந்த வாழ்வு.

14. சமயத்தின் பெயரால் இல்லற வாழ்வை மறுக்கவோ! பெண்ணின்பத்தை வெறுக்கவோ! முற்படுபவர்கள் தற்கொலை செய்து கொள்பவர்களாவார்கள்.

15. சத்தியும் சிவமுமாய் இறைமையைப் பதினெண்சித்தர்கள் வடிவப் படுத்திக் காட்டியும் துறவறம் மேற்கொள்பவர்கள் அறியாமை மிக்கவர்களே! இவர்களுக்கு வீடுபேறு கிடைப்பதில்லை.

16. பதினெண்சித்தர்கள் தற்காப்பு மிக்கவர்களே! பிறரை தாக்க வரும் துன்பங்களிலிருந்து காக்க வல்லவர்கள் என்ற தத்துவத்தை விளக்கத்தான் வழிபாட்டுக்குரிய எல்லா ஆண், பெண், சிறுவர், சிறுமி ... முதலிய அனைவரும் போர் ஆயுதங்களை உடையவர்களானார்கள்.

17. இறைமை பேராற்றலுடையது என்ற தத்துவத்தை விளக்கவே பதினெண்சித்தர்கள் படைத்த வழிபாட்டு வடிவங்கள் பல தலைகளையும், பல கைகளையும் உடையவைகளாகப் படைக்கப் பட்டன.

18. எல்லா உயிரினங்களிலும் இறைமைத் தத்துவம் உண்டென்ற பேருண்மையினை விளக்கவே பதினெண்சித்தர்கள் படைத்திட்ட வழிபாட்டு வடிவங்கள் மானுட உடலில் பிற உயிரினங்களின் அங்கங்கள் இணைந்துள்ளவாறு படைக்கப் பட்டன.

19. மணமில்லாத மலருக்கு வண்ண அழகும், வடிவ அழகும் சிறப்புப் பெறத் துணை புரிகின்றன. அழகில்லாத பெண்ணுக்கு அன்பு நெஞ்சமும், தாய்மையும் சிறப்புப் பெறத் துணை புரிகின்றன.

20. உடலுக்கு வரும் நோய்க்கே மருத்துவர்களால் மருந்து கண்டு முழு வெற்றி பெற முடியவில்லை என்கின்ற போது; உயிர்க்கு வரும் நோய்க்கு மருத்துவர் ஏது?! மருந்து ஏது?! இறைமையை நினைத்து அழுது தொழுதாலன்றி வேறு வழியில் தீரா நோயும் பேயும் அகன்றிட முடியாது.

# சித்தர் நெறி வாசகங்கள்

1. "அஞ்சி அஞ்சிச் சாகாதே; கெஞ்சிக் கெஞ்சி வேகாதே!"

2. "உன்னை உழைக்காமல் பிழைக்கச் சொல்லவில்லை இறைவன்."

3. "எதையுமே வெறுக்கக் கற்றுக் கொள்ளாதே; எல்லாவற்றையும் விரும்பக் கற்றுக் கொள்."

4. "ஏதும் கல்லாத மூடருமில்லை; எல்லாம் கற்ற அறிவாளியுமில்லை."

5. "துன்பம் வரும்போது மட்டும் இறைவனை நாடாதே; இன்பம் வரும் போதும் இறைவனைத் தேடு."

6. "இறைவன் நினைவு உன் குறைகளை குறைக்கும்; இறைவன் நினைவு உன் நிறைகளை நிறைக்கும்."

7. “அழிவும் ஆக்கமும் அகங்கை புறங்கை போன்றவையே.”

8. “கண்ணை மூடிக் கொண்டு நம்புவதும் தவறு; கண்ணை மூடிக் கொண்டு மறுப்பதும் தவறு.”

9. “ஆசை நிறைவேறப் பூசை செய்.”

10. “எல்லாவற்றையும் நம்புகிறவன் முட்டாள்; எதையுமே நம்பாதவன் அயோக்கியன்.”

11. “அருளாளர்கள் அனைவரும் ஒன்றே.”

12. “உலகில் உள்ள எல்லாத் தேவாலயங்களும், கோயில்களும், திருச்சபைகளும், வழிபாட்டுக்குரிய இடங்களும், .... சித்தர்களால்தான் உருவாக்கப் பட்டவை என்பதால் மதவெறியே தேவை இல்லை. எல்லா மதமும் சமமே.”

13. “மனிதனை விலங்காக ஆக்கிடாமல் வெறியற்று நெறியோடு வாழச் செய்வதே மதம். இதனை மனிதரின் நன்மைக்காக உருவாக்கியவர்கள் சித்தர்களே. எனவே, எம்மதத்தையும் மறுக்காதே, வெறுக்காதே.”

அன்பே சிவம்.

ஓம் திருச்சிற்றம்பலம்.

**குறிப்பு**:- தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களால் எழுதப் பட்ட **பல ஆயிரம் குரு வாசகங்களில்** சில துளிகளே இவை.

**<u>வெளியிடுபவர்கள்</u>:-**

அருள்மிகு பதினெண்சித்தர் குருவழி வாரிசு, சித்தரடியார் சோ.இரவீந்திரன்.

சித்தரடியான், அருள்மிகு சேலம் கோட்டை மாரியம்மன் சன்னிதானம்.

**<u>தொடர்பு</u>**:- அருள்மிகு ஞாலகுரு சித்தர் கருவூரார், 15, சண்முகம் தெரு, வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-53.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: அச்சிடப்பட்ட அறிவிக்கை; 1981-82இல் அச்சிட்ட இந்த அறிவிக்கையை எந்த மாற்றமும் இன்றி அப்படியே இங்கே தரப் பட்டிருக்கிறது.//**

**//மூல அறிவிக்கையை அச்சிட்டோர்: ஸ்ரீஅரி அச்சகம், 311, புதூர், சேலம்-7//**

# சித்தர் நெறி சிறு விளக்கம்

**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**

**குருமகா சன்னிதானம்**

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

சோதிடம், பிறப்பியல், மனையியல், அங்கவியல், கைரேகை, பஞ்சாங்கம், பூசை, தவம், மந்திரம் .... முதலியவை மனித மனத்துக்கு நிறைவையும், சிந்தைக்குத் தெளிவையும், உணர்வுக்கு அமைதியையும், செயலுக்கு உறுதியையும், எண்ணத்துக்கு உரத்தையும், வாழ்வுக்குக் கவர்ச்சியையும் நல்கிடும்! நல்கிடும்! நல்கிடும்! வேறு எதனாலும் இவற்றைப் பெற முடியாது, விலை கொடுத்து வாங்க முடியாது.

அருளூற்றுகிடும் சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும் மக்களின் தாகங்களைத் தீர்க்கவும்; புறத் தூய்மையைச் சிறக்கச் செய்யவும், அன்பும், அமைதியும், பொறுமையும், நிறைவும், அழகும், மென்மையும், நளினமும், நாகரீகமும், சுத்தமும், ..... மனித வாழ்வில் சிறக்கவும் உழைப்பார்கள்.

சித்தர்கள் மந்திரவாதிகள் அல்லர், இறைமையின் இருப்பிடங்களே சித்தர்கள். மனித சமுதாயம்

ஒற்றுமையோடும், பற்றேடும், பாசத்தோடும், உறவுமுறைகளோடும், உரிமைகளோடும் அமைதியாக வாழ வழியமைத்தவர்களே சித்தர்கள்.

சாத்திரங்கள், சடங்குகள், பழக்க வழக்கங்கள், மரபுகள், முறைகள், நெறிகள், ஒழுகலாறுகள், சட்டதிட்டக் கட்டுப்பாடுகள், ....... முதலியவைகளை உருவாக்கிய சித்தர்களின் அடியான்களும், அடியார்களும் 'பொதுவுடமை', 'சமத்துவம்', 'சகோதரத்துவம்', 'மனிதாபிமானம்', 'அன்புநெறி', 'அமைதி', ........ முதலியவை செழிக்கவே பாடுபடுவார்கள். சித்தர் நெறியே பகுத்தறிவு வளர்த்து அகவாழ்வுக்குரிய மெய்ஞ்ஞானத்தையும், புறவாழ்வுக்குரிய விஞ்ஞானத்தையும் செழிப்படையச் செய்யக்கூடிய ஒன்று.

அனைவரும் வருக! அறிவும் அருளும் பெறுக!

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியார் திரு சீ.மணி (வேம்படிதாளம்) அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல். எப்பொழுது எழுதப்பட்டது என்ற குறிப்பு கிடைக்கவில்லை.//**

# பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின்

# குருபாரம்பரிய வாசகம்

**[அவர் தமது இறுதிக் காலத்தில் சிந்தை நொந்து மனம் நைந்து எழுதியவை]**

1. “பைந்தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளே இந்துமதம்.”

2. “அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அமுதத் தமிழ்மொழியில் வழிபடுபவர்களே அளப்பரிய அருளாற்றலைப் பெறுகிறார்கள்.”

3. “அருளுலக மூலவர்களாகவும், காவலர்களாகவும், வாரிசுகளாகவும் உள்ள தமிழர்களில்தான் அருளாளர்கள் காலங்கள் தோறும் தோன்றிக் கொண்டே யிருக்கிறார்கள்.”

4. “மங்கையரை வணங்கும் கடவுளாகப் போற்றி வரும் வண்டமிழரின் வாழ்வியல்தான் இந்துமதம்.”

5. “உள்ளங்களும், இல்லங்களும் அருட்பெருஞ் சோதிகளாய் விளங்கும் தமிழினத்தின் விடுதலைதான் உலக இனங்களின் விடுதலை.”

6. “தமிழினத்தின் வீழ்ச்சியும் தாழ்ச்சியுமே இந்துமதத்தின் வீழ்ச்சியும் தாழ்ச்சியுமாயிற்று.”

7. “தமிழின விடுதலையே இந்துமத விடுதலை! இந்துமத விடுதலையே தமிழ்மொழி விடுதலை!! தமிழ்மொழி விடுதலையே இந்துக்களின் விடுதலை!!!”

8. “தாய்மொழி விடுதலையே தன்மான விடுதலை என்று உணர்பவனே மனிதன்.”

9. “தனது மதத்தைப் புரிந்தவனே! தான் அனாதையில்லை என்பதைத் தெரிந்தவன்.”

10. “அருளுலகப் பொருளுலக வறட்சிகளையும், தாகங்களையும், பசிகளையும் போக்கும் அருளூற்றுக்களே கோயில்கள்.”

11. “மனித குல அகஞான புறஞான மெய்ஞ்ஞான விஞ்ஞானங்களின் சுருக்க விளக்கத் தொகுப்பே தமிழரின் இந்துமதம்.”

12. “அக இருள்களையும், புற இருள்களையும் அகற்றும் பெருஞ்சுடர்களே தமிழரின் வழிபாட்டு முறைகள்.”

13. “மானுடப் பிறவிக்கும், பயிரின உயிரின வாழ்வியல் இயக்கங்களுக்கும், மண்ணையும் விண்ணையும் இணைத்து இயக்குபவைகளுக்கும் விளக்கம் தருவதே பதினெண்சித்தர்களின் **‘சித்தர் நெறி’யெனும் ‘சீவ நெறி’யான மெய்யான இந்துமதம்**.”

14. "ஆறுத் துயரங்களையும், தீராத் தொல்லைகளையும், மாறுக் கவலைகளையும் நலப்படுத்துவதுதான் தமிழரின் இந்துமதச் சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகள்."

15. "கன்னித் தமிழர் கடவுளருக்குக் கட்டிய கலைக் கோயில்களே காலம் காலமாக நிகழ்ந்து வரும் கருத்து வளர்ச்சிச் சாதனைகளைக் காத்து வரும் கருவூலங்கள்."

16. "குரு வாசகமும், திரு வாசகமும் அருளுலகின் உயிரும் உடலும் ஆகும்."

17. "கரு வாசகமும், தரு வாசகமும் அருளுலகின் கண்களாகும்."

18. "அருள் வாசகமும், மருள் வாசகமும் அருளுலகின் கைகளாகும்."

19. "பதினெண் கீழ்க் கணக்கும், மேல் கணக்கும் அருளுலகின் கால்கள் ஆகும்."

20. "பதினெண்சித்தர்களின் படைப்புக்களே அண்ட பேரண்ட அருளுலகின் வடிவமைப்பும் வாழ்வியலும் ஆகும்."

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியார் திரு சீ.மணி (வேம்படிதாளம்) அவர்களின் கையெழுத்தில் 14/11/1988இல் எழுதப் பட்ட நகல்.//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அஉறுதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org
Email: indhuism@gmail.com